# தமிழ்

## ஆண்டு 8

## TAMIL YEAR 8



அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# 8 தாய்நாடு




New Message

From Maaran Velavan<maaran@gmail.com>
To| Nilavan Tamilchelvan <nilavan@gmail.com>

Subject கல்விச் சுற்றுலா

வணக்கம் நண்பா!

எப்படி இருக்கிறீர்கள்?

நீங்கள் எழுதிய மின்னஞ்சலை நான் இன்றுதான் படித்தேன். ஏனென்றால், எங்கள் பள்ளி மாணவர்களுடன் ஒரு வாரம் கல்விச் சுற்றுலா சென்றிருந்தேன். மட்டக்களப்பிலிருந்து அநுராதபுரம், திருகோணமலை, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்குப் போய் வந்தோம். இச்சுற்றுலாவின்போது வகுப்பில் கற்ற எம் தாய்நாட்டின் வரலாற்றுத் தகவல்கள் பலவற்றை நேரில் கண்டறிந்தோம். நிலவன்! இத்தகவல்கள் உங்களுக்கும் ஆர்வத்தைத் தரும் என்பதால் அவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா என்பன தமிழர் தாயகத்தில் உள்ள பெரு நகரங்களாகும். தமிழரின் பண்பாடும் மரபுகளும் இந்த நகரங்களில் பேணப்பட்டு வருகின்றன. இவை வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவை. மலையகத்திலும் தமிழர் வாழ்கின்றார்கள். இவர்கள் தேயிலை, இறப்பர் போன்ற பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்காகப் பிரித்தானியரால் தென்னிந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்டவர்கள்.

எல்லாளன், சங்கிலியன், கயிலாயவன்னியன், பண்டாரவன்னியன் போன்ற தமிழ் மன்னர்கள் ஈழவரலாற்றில் சிறப்பிடம் பெறுகிறார்கள். இவர்களின் ஆட்சிக்காலங்கள் வெவ்வேறாக இருந்தாலும் தமிழினத்துக்கே பெருமை சேர்த்த மன்னர்களாக வரலாற்றில் இடம்பெற்றுள்ளனர். நிலவன்! எங்கள் சுற்றுலாவின்போது அநுராதபுரத்திலுள்ள எல்லாளன் நினைவுச்சின்னம், கற்சிலைமடுவில் உள்ள பண்டாரவன்னியனின் நினைவுக்கல் போன்ற பல வரலாற்றிடங்களைப் பார்த்தோம். யாழ்ப்பாணத்தின் இறுதித் தமிழ்மன்னன் சங்கிலியனின் சிலையைப் பார்க்கும்போது அவரது வீரத்தைப் பற்றி உணரக்கூடியதாக இருந்தது. அச்சிலையும் தமிழின அழிப்புகள் நடைபெற்றபோது பல தடவைகள் உடைக்கப்பட்டன என ஆசிரியர் சொன்னார்.

நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியவற்றுள் முதன்மையானவை மாவீரர் துயிலும் இல்லங்கள். தமிழீழ மண்மீட்புக்காகத் தங்கள் உயிர்களை ஈகம் செய்த மாவீரர்கள் துயிலும் இடங்கள் அவை. அங்கிருந்த ஒவ்வொரு நடுகற்களும் ஈழப்போரின் வரலாற்றுக்குச் சான்றாக அமைந்தன. அவ்விடங்களில் காலடி வைக்கும்போது சொல்ல முடியாத உணர்வுகள் எனக்குள் ஏற்பட்டன. தமிழர் வரலாறு, கலை, பண்பாட்டு விழுமியங்களை அழிக்கும் நோக்கில் சிங்கள அரசால் எரிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பொது நூலகத்திற்கும் எங்களை ஆசிரியர் அழைத்துச் சென்றார். இன்று அழகுற நிமிர்ந்து நிற்கும் அக்கட்டடத்துக்குப் பின்னால் உள்ள துன்பமிகு வரலாற்றை ஒவ்வொரு தமிழரும் அறிந்திருக்க வேண்டும்.

நிலவன், நீங்கள் பிரித்தானியாவிலிருந்து விடுமுறைக்குத் தாயகம் வரும்போது நான் இவ்விடங்களுக்கு உங்களை அழைத்துச் செல்கிறேன்.

அன்புடன்,

மாறன்.




## சொற்கள்

ஈகம் | செறிவு | தமிழகம் | துயிலும் இல்லங்கள் | பெருந்தோட்டம்

பொதுநூலகம் | மண்மீட்பு | மாவீரர் | மின்னஞ்சல் | நினைவுக்கல் | வரலாற்றுச் சிறப்பு | விழுமியம்

**வினாக்களுக்கு விடை கூறுக:**

1. மாறன் சுற்றுலா சென்ற இடங்கள் எவை?
2. தென்னிந்தியாவிலிருந்து தமிழர்கள் அழைத்து வரப்பட்டமைக்கான காரணம் யாது?
3. தமிழினத்திற்குப் பெருமை சேர்த்த மன்னர்கள் மூவரின் பெயர்களைக் கூறுக.
4. தமிழீழ மண்மீட்புப் போரின் வரலாற்றுச் சான்றாக அமைவன எவை?
5. யாழ்ப்பாணப் பொதுநூலகம் ஏன் எரிக்கப்பட்டது?
6. மாறன் எங்கே வாழ்கிறான்?

# தமிழ்

## ஆண்டு 10

## TAMIL YEAR 10



அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# 4 தமிழர் புலப்பெயர்வு







மக்கள் மரபு வழியாக வாழ்ந்த தங்கள் மண்ணை விட்டு, வேறு ஒரு நாட்டிற்குக் குடிபெயர்ந்து செல்லுதல் புலப்பெயர்வு எனப்படும். அன்று தொடக்கம் இன்று வரை பல இன மக்களிடையே புலப்பெயர்வு நடைபெறுகிறது. போர், நோய், அரசியல், பொருளாதாரம், இயற்கையின் சீற்றம், பிறநாட்டுப் படையெடுப்பு போன்ற வெவ்வேறு காரணங்களால் மக்கள் புலம்பெயர்கின்றனர். இவ்வகையில் தமிழரின் புலப்பெயர்வு நடைபெற்ற காலகட்டங்களை வகைப்படுத்தலாம்.

### முதற் கட்டப் புலப்பெயர்வு – சிந்துநதிப் பகுதியை விட்டுப் புலம்பெயர்தல்

கி.மு 1500ஆம் ஆண்டளவில் ஆரியர்கள் புதுநிலங்களைத் தேடிவந்து, நாவலந்தீவினுள் (இந்தியாவினுள்) நுழைந்து, வடபகுதியைத் தம் வசப்படுத்தினர். தமிழர்கள் இவர்களின் வருகையால் சிந்துநதிப் பகுதியை விட்டுத் தெற்கு நோக்கிப் புலம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது.

### இரண்டாம் கட்டப் புலப்பெயர்வு – எல்லை விரிவாக்கம்

கி.பி. 9ஆம் நூற்றாண்டுகளில் சோழப்பேரரசின் எல்லை விரிவாக்கத்தால், தமிழர் புலப்பெயர்வு தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பரவலாக நடந்தது. குறிப்பாகத் தமிழ்ப்படை வீரர்களும் வணிகர்களும் இந்நாடுகளில் குடியேறினார்கள்.

### பிரித்தானிய ஆட்சியில் புலப்பெயர்வு – பொருண்மியம் நோக்கிய புலப்பெயர்வு

பிரித்தானியர், தமிழகத்தையும் ஈழத்தையும் ஆட்சி செய்த காலத்தில் புலப்பெயர்வு நிகழ்ந்தது. பெருந்தோட்டங்களில் வேலை செய்வதற்குக் கூலிகளாகத் தமிழர் அழைத்துச் செல்லப்பட்டனர். இவ்வாறு புலம்பெயர்ந்த தமிழர் ஆசியா, ஆபிரிக்கா, தென் அமெரிக்கக் காடுகளில் அடிமைகளாக வாழ்ந்தனர். தமிழ்நாட்டிலிருந்து தமிழர்கள் ரியூனியன், தென்னாபிரிக்கா, மொறிசியசு, பிசித்தீவுகள், ரிணிடாட், கயானா போன்ற நாடுகளுக்குக் கரும்புத் தோட்டக் கூலிகளாகக் கொண்டு செல்லப்பட்டனர். இவர்கள் இன்று மொழி இழந்தோராய் வாழ்கின்றனர்.

சிங்கப்பூர், மலேசியப் பெருந்தோட்டங்களில் கூலித்தொழிலாளராகத் தமிழகத் தமிழரும் மேலாண்மைப் பணிகளுக்கென ஈழத்தமிழரும் புலம்பெயர்ந்து சென்றனர்.

பண்ணைகளிலும் தொழிற்கூடங்களிலும் பணிபுரிவதற்காகத் தமிழர் பர்மா நாட்டுக்குப் புலம்பெயர்ந்தனர்.

### அரசியல் – போரின் காரணமாகப் புலப்பெயர்வு

1948இல் ஈழம் பிரித்தானியர் ஆட்சியிலிருந்து விடுபட்டது. ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகளால் தமிழர்கள் அடக்கி ஒடுக்கப்பட்டதோடு படுகொலைகளும் செய்யப்பட்டனர். அதனால், ஈழத்தமிழர் இழந்த தமது தாயகத்தை மீட்கப் போராடினர்.



சிங்கள அரசுகளால் தமிழர்கள் மீது தொடர்ந்து நடத்தப்பட்ட இன அழிப்புகளால் ஈழத்தமிழர் புலம்பெயரவேண்டிய நிலை ஏற்பட்டது. 1983இலும் தொடர்ந்த தமிழின அழிப்பால் பெருமளவான ஈழத்தமிழர் தமிழகத்திற்கும், ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளுக்கும், அவுத்திரேலியாவுக்கும் புலம்பெயர்ந்துள்ளனர். இன்றுவரை ஈழத்தமிழர் புலப்பெயர்வு தொடர்கிறது.

இன்று ஈழத்தமிழர் ஐம்பதிற்கும் மேற்பட்ட நாடுகளில் பரந்து வாழ்வதோடு, இவர்களில் பலர் அந்தந்த நாடுகளின் குடியுரிமைகளையும் பெற்றுள்ளனர். அந்நாடுகளில் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் ஈழத்தமிழர் அடுத்த தலைமுறையினருக்குத் தமது தாய்மொழியினையும் பண்பாட்டு அடையாளங்களையும் இனங்காட்டுவதில் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.

### தமிழர் புலப்பெயர்வு

| | |
|---|---|
| குமரிக்கண்டம், சிந்துவெளி | ஆள்புலம் இழந்த புலப்பெயர்வு |
| 10ஆம் நூற்றாண்டு | எல்லை விரிவாக்கத்தினால் புலப்பெயர்வு |
| 19ஆம் நூற்றாண்டு | பொருண்மியம் நோக்கிய புலப்பெயர்வு |
| 20, 21ஆம் நூற்றாண்டுகள் | போரின் காரணமாக ஈழத்தமிழர் புலப்பெயர்வு |

**சொற்கள்**

இறுதிக்கட்டப் போர் | இனவழிப்பு | உரிமை மீறல்கள் | குடிப்பெயர்வு | குடியுரிமை | கூலித்தொழிலாளர் | புலப்பெயர்வு | பெருந்தோட்டம் | மேலாண்மைப் பணிகள் | விரிவாக்கம்

# 10 நடுகல் வழிபாடு






காலங்காலமாகத் தமிழரிடையே வழங்கப்பட்டு வரும் மரபுகளும் நம்பிக்கைகளும் தமிழர் பண்பாட்டுடன் கலந்துள்ளன. இப்பண்பாடுகளில் நடுகல் வழிபாடு மிகச் சிறப்பு வாய்ந்தது. பழந்தமிழகத்தில் செயற்கரிய பெரும் செயல்களைச் செய்த வீரர்களும் நாடு காத்த மன்னர்களும் வீரச்சாவடைந்த பின்னர் போற்றப்பட்டனர். பழந்தமிழர் அவர்களுக்கு நடுகல் நட்டு வழிபாடு செய்தனர். இதுவே நடுகல் வழிபாட்டு முறையென அழைக்கப்படுகிறது. நடுகல் வழிபாட்டு வழக்கம் உலக நாடுகள் பலவற்றில் பின்பற்றப்படுகிறது.

இற்றைக்கு 2700 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழகத்திலும் ஈழத்திலும் நடுகல் நாட்டும் மரபு பின்பற்றப்பட்டு வந்துள்ளது என்பதனைச் சங்ககால இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. அக்காலத்தில் வீரச்சாவடைந்த வீரனைப் புதைக்கும்போது அவனது உடலுடன் அவன் பயன்படுத்திய போர்க் கருவிகளையும் பொருட்களையும் சேர்த்துப் புதைத்தனர் எனத் தெரிய வருகிறது. அண்மைக் காலங்களில் பரவலாக நடைபெற்ற தொல்லியல் ஆய்வுகளில் நடுகற்களின் அருகே கற்படுக்கைகள், மட்பாண்டங்கள், அணிகலன்கள் போன்றவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பழங்கால நடுகற்களில் இறந்த வீரனின் உருவம், பெயர், செயல் போன்ற செய்திகள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. பழங்கால இலக்கியச் சான்றுகளையும் குறிப்புகளையும் ஆராய்கின்ற போது, தனது குமுகத்துக்காக விழுப்புண்பட்டு வீரச்சாவடையும் வீரனுக்கே நடுகல் நடப்பட்டது எனும் செய்தி கிடைக்கிறது.

நடுகல்லில் பொறிக்கப்பட்டிருக்கும் தலையாய தகவல்கள் பற்றி சங்க இலக்கியமான அகநானூறு சில பாடல் வரிகள் மூலம் சான்று பகருகிறது.

.... மறவர்
பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்

– அகநானூறு 67

வீரச்சாவடைந்த வீரர்களின் பெயர்களையும் சிறப்புகளையும் பொறித்து முறை பிறழாமல் மயிற்பீலி சூட்டிய நடுகற்கள் என்பது இப்பாடல் வரிகளின் பொருள். நடுகற்கள் மேல் மயிற்பீலி சூட்டும் வழக்கம் இருந்துள்ளது எனும் செய்தியும் இவ்வரிகள் மூலம் எமக்குக் கிடைக்கிறது.

பரலுடை மருங்கிற் பதுக்கை சேர்த்தி
மரல் வகுந்து தொடுத்த செம்பூங் கண்ணியொடு
அணி மயிற் பீலி சூட்டிப் பெயர் பொறித்து
இனி நட்டனரே! கல்லும் கன்றொடு
கறவை தந்து பகைவர் ஓட்டிய
நெடுந்தகை கழிந்தமை அறியாது
இன்றும் வரும்கொல் பாணரது கடும்பே

– புறநானூறு 264

பரல் கற்களை அடுக்கிக் கட்டிய பதுக்கையில் நடுகல் நாட்டினர். மரல் (ஒரு வகை மரம்) நாரைக் கிழித்து மாலை தொடுத்து அணிவித்துள்ளனர். மயிற்பீலியும் கட்டி வைத்துள்ளனர். நடுகல்லில் பெயரும் பொறித்துள்ளனர். இவன் பகைவர் ஓட்டிய ஆநிரைகளைக் கன்றொடு மீட்டுத் தந்தவன். இவன் இல்லாமல் போய்விட்டான் என்பதை அறியாமல், இவனிடம் பரிசில் பெறுவதற்குப் பாணர் இன்றும் வருவார்களே!

காலப்போக்கில் நடுகல் வழிபாட்டு வழக்கம் அருகிக் காணப்பட்டது. எனினும், தமிழீழ மண்ணை மீட்கும் போரிலே வீரச்சாவடைந்த மாவீரருக்கு நடுகல் நடும் மரபு மீண்டும் ஏற்படுத்தப்பட்டது. தாயகத்தில் பல்லாயிரம் நடுகற்கள் தமிழீழ மறவர்களின் வீரத்துக்கும் ஈகத்துக்கும் சான்றாகத் திகழ்ந்தன. இப்போது அவை சிங்கள அரசால் அழிக்கப்பட்டுள்ளன. போரில் உயிர் இழந்த வீரர்களுக்கு நடுகல் அமைத்து வழிபடுவதும் போர் அறங்களில் ஒன்றாகும். இதனைக் கூடத் தமிழர் தாயகத்தில் சிங்கள அரசு விட்டுவைக்கவில்லை.



**சொற்கள்**

ஆநிரைகள் | ஈகம் | கண்ணி | கறவை | நெடுந்தகை | பதுக்கை | பரல் | பாணர் | பீடு | மயிற்பீலி

**வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. நடுகல் வழிபாடு என்றால் என்ன?
2. நடுகற்களில் எவை பொறிக்கப்பட்டிருக்கும்?
3. சங்ககால இலக்கியங்களிலிருந்து நடுகல் வழிபாட்டு முறை பற்றி எமக்கு என்ன தெரிய வருகிறது?
4. புறநானூற்றுப் பாடலில் குறிப்பிடப்பட்ட நடுகல் பற்றி விளக்கி எழுதுக.
5. அகநானூற்றுப் பாடலிலிருந்து எமக்குக் கிடைக்கும் செய்தி என்ன?
6. ஆநிரை கவர்தல் என்றால் என்ன?
7. தாயகத்திலுள்ள நடுகற்கள் எவற்றுக்குச் சான்றாக இருக்கின்றன?

**தகவல் பெட்டகம்**

## விருந்து

விருந்து, விருந்தினர் என்ற சொற்களுக்கு முழுமையான பொருள் கொடுத்தவர்கள் தமிழர்கள். நாடி வரும் புதியவரை விருந்தினர் என்றும் அவர்களுக்கு வழங்கும் உணவை விருந்து என்றும் ஒரே சொல்லால் அழைத்தனர். சாவைத் தடுக்கும் மருந்தாக இருந்தாலும் பிறருக்குக் கொடுத்து உண்பதே தமிழர் பண்பாடு. அடுத்த பிறப்புக்காகப் பொருளைச் சேர்த்து வைக்க வேண்டுமாக இருந்தால், அதைச் சேர்க்கின்ற இடம் பசித்தோர் வயிறுதான். ‘உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்’ என்பது தமிழர் பழமொழி. கோவலன் இன்றி விருந்தினருக்கு விருந்தளிக்க முடியவில்லையே என்று வருந்தினாள் கண்ணகி. அட்சய பாத்திரம் கொண்டு பசித்தோருக்கெல்லாம் உணவு கொடுத்தாள் கோவலன் மகள் மணிமேகலை. விருந்தோம்புதலே வாழ்வின் தலையாய அறம் என வாழ்ந்தோர் தமிழர்.

